திரு. ரா. ரா. முனுசாமி : தென்னாற்காடு மாவட்டம் செஞ்சி பகுதியில் இதை ஏற்படுத்தினால் இப்போது போக்குவரத்து வசதியில்லாது கஷ்டப்படுகிற அந்தப் பகுதி மக்களுக்கு மிகவும் வசதியாக இருக்குமே, இதை யாவது கருதி மறுபரிசிலனை செய்து ரத்தப் பரிசோதனை நிலையத்தை அங்கே ஏற்படுத்த அரசாங்கம் முற்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அண்மையில் நான் செஞ்சி மருத்துவ மனையைப் போய்ப் பார்த்தேன். அது அங்கத்தினருக்குத் தெரியாது. அந்த மருத்துவ மனையில் ஏற்கனவே லாபரெடரி அட்டெண்டண்ட் இரண்டாம் தரப் பயிற்சி பெற்றவர் ரத்தப் பரிசோதனைக்காக இருக்கிறார். அங்கே பெரிய லாபரெடரி ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னால், இதைப் போல இன்னும் பல இடங்கள் இருக்கின்றன. அந்த வரிசையில் ஏற்படுத்துகிறபோது செஞ்சியிலும் ஏற்படும். ஒருவேளை செஞ்சி அந்த வரிசையில் கடைசியில் தான் வரலாம்.

**7 வினா—திரு. ரா. ரா. முனுசாமி :* மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி அரசாங்க மருத்துவ மனையில் ஒரு எக்ஸ்ரே பகுதி ஏற்படுத்தப்படும் செயற்குறிப்பு அரசாங்க பரிசிலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) கேள்வி எழாது.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவர் அவர்களே, செஞ்சி பகுதியில் அடிக்கடி தகராறு ஏற்பட்டு கைமுறிவு, கால் முறிவுகள் எல்லாம் ஏற்படுகின்றன. உடனே எக்ஸ்ரே எடுத்து போலீஸ் கம்ப்ளெயின்ட்டுகூடக் கொடுக்க முடியவில்லை. ஆகவே அதை உத்தேசித்தாவது அங்கே ஒரு எக்ஸ்ரே பிரிவை ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்த ஆண்டு பரிசுச் சீட்டு விற்பனை மூலம் கிடைத்த 10 லட்சம் ரூபாயில் அதிக படுக்கை வசதியுள்ள பத்து தாலுக்கா மருத்துவமனைகளில் இந்தப் பிரிவை ஏற்படுத்த முடிவு செய்திருக்கிறோம். குறிப்பாக அரக்கோணம், போளூர், ஹோசூர், நிலக்கோட்டை, உசிலம்பட்டி, நன்னிலம், மாயூரம், சீர்காழி போன்ற இடங்களில் இந்த ஆண்டு ஏற்படுத்தப்படுகிறது. வருகிற ஆண்டிலும் உறுப்பினர்கள் பரிசுச் சீட்டு விற்பனையை ஊக்குவித்தால் இன்னும் 20 படுக்கையுள்ள ஆஸ்பத்திகளுக்கும் விஸ்தரிக்கிறபோது செஞ்சிக்கும் வர முடியும்.

Labour strike in Madras Harbour

* 8 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the Government are aware of the Labour strike in the Madras Harbour paralysing trade and industry in the State ; and

(*b*) if so, the details thereof ; and

(*c*) the action taken thereon?